# தெய்வத்தின் குரல்

## மௌலௌ கங்கா ஶஶாங்கௌ

நம: பார்வதீ பதயே ஹரஹர மஹாதேவ

கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்த கோவிந்த

**मौलौ गङ्गा शशान्कौ कर चरण तले शीतलाङ्गा:  भुजङ्गा:1**
**वामे भागे दयार्द्रा  हिमगिरि दुहिता चन्दनं सर्वगात्रे 11**
**इत्तम् शीतं प्रभूतं तव कनकसभा नाथ सोढुं क्व शक्ति: 1**
**चित्ते निर्वेद तप्ते यदि भवति न ते नित्य वासो मदीये 11**

**மௌலௌ க3ங்கா3 ஶஶாங்கௌ கர சரண தலே ஶீதலாங்கா3: பு4ஜங்கா3:**
**வாமே பா4கே3 த3யார்த்3ரா ஹிமகி3ரி து3ஹிதா சந்தனம் ஸர்வகா3த்ரே**
**இத்தம் ஶீதம் ப்ரபூ4தம் தவ கநகஸபா4 நாத2 ஸோடு4ம் க்வ ஶக்தி:**
**சித்தே நிர்வேத3 தப்தே யதி3 ப4வதி ந தே நித்ய வாஸோ மதீ3யே**

இது ஒரு ஸ்லோகம். இந்த ஸ்லோகத்தினுடைய ஆரம்பத்துல "**மௌலௌ கங்கா ஶஶாங்கௌ**" னு மொதல்ல ஆரம்பம். "மௌலௌ"னா மௌலீல னு அர்த்தம். "மௌலீ"னா என்ன அர்த்தம்னு கேட்டா ஶிரஸ்ல, தலையில் செய்து கொள்ளும் அலங்காரத்துக்கு மௌலீ, மௌலீனு பேர். தலையினோட மேல் பாகத்துக்கு மௌலீனு பேர். அதான் சந்த்ரமௌலீ, சந்த்ரமௌலீனு. சந்திரமௌலீஸ்வரர் னு மடத்துல பூஜை பண்ற சாமிக்கு  சந்திரமௌலீஸ்வரர்னு அநேகம் பேருக்கு காதுல விழுந்திருக்கும். சில பேர்க்கு அதை வைச்சுண்டு  பேர் கூட சந்திரமௌலீனு பேர் வெச்சு இருக்கா சில இடங்கள்ள. அதனால மடத்துல இருக்கிற ஸ்வாமி தான் சந்திரமௌலீஸ்வரர் னு பேர். சில க்ஷேத்ரங்கள்லயும்

கோவில்ல  ஸ்வாமிக்கு சந்திரமௌலீஸ்வரர்னு பேர் இருக்கு. மௌலீனா தலையின் உடைய மேல் பாகம்னு அர்த்தம். மௌலௌனா, மௌலீலனா தலையின் மேலில்னு அர்த்தம். உச்சியில்னு அர்த்தம். உச்சினு சொல்லலாம், மௌலீங்கறத்துக்கு நேர் வார்த்தையா சொன்னா. அந்த மௌலீல உனக்கு  “**கங்கா ஶஶாங்க்**” தலையினுடைய உச்சில உனக்கு இரண்டு  சாமான் இருக்கு. " **கங்கா ஶஶாங்கௌ”,** கங்கானா எல்லாருக்கும் புரியரது. கங்கைனு அர்த்தம்.  **ஶஶாங்கம்** னா,  ஶஶம்னா முசலுக்கு பேர். முயல். முயலை அடையாளமாக உடைய பொருளுக்கு அங்கம் அங்கம்னா அடையாளம்னு அர்த்தம். முயலை அடையாளமாக உடையது சந்திரன். சந்திரன் முகம் கறுப்பா இருக்கே. அதை பார்த்தா முயல் மாதிரி இருக்கு பார்க்கறத்துக்கு. ஆகையினால உன்னுடைய ஶிரஸில உன்னுடைய மௌலீயில கங்கா நதி, சந்திரன் இது ரெண்டும் இருக்கு. எப்ப பார்த்தாலும் பெரிய கங்கா நதியும் சந்திரனும் உன்னுடைய தலையில இருக்கு. ரொம்ப நாழி நிலாவுல இருந்தா கூட ஶீதலமா போயிடறது. அப்படி இருக்கறப்போ ஜலத்தையும்  தலையில வைச்சுண்டு நிறைய ஜலத்தை தலையில வைச்சுண்டு, சந்திரனையும்  நேரா வைச்சுண்டு, இருந்தா  உனக்கு எப்படி ஜலதோஷம் பிடிக்காம இருக்குனு, ஒரு கேள்வ மாதிரி இவா  இரண்டும் தலையில இருக்கு. கையிலையும்  காலிலையும் தோள்பட்டையிலும் கால்ல இந்த பாதசரம் மாதிரி சுத்திண்டு இருக்கறது, இதெல்லாம் எல்லாரும் தங்கத்தினால, கிங்கத்தினால, வெள்ளியினாலயோ போட்டுக்குவா , சாதாரணமா, இதை வைச்சு.  நீர் எதை போட்டுண்டிருக்கீர்னா, இந்த கைக்கு ஆபரணம்,கை காப்பு, கால் காப்பு, காலுக்கு பாதசரம் இதெல்லாம் .

**கர சரண தலே ஶீதலாங்கா:**

எங்கேயானும் நாம போயிருந்தோமானா பாம்பு இருந்து மிதிச்சுட்டோமானா பாம்புனு அப்ப சட்னு தெரியாது. ஜில்லுன்னு இருக்குன்னு சொல்லுவா. பாம்பு எப்ப பார்த்தாலும் தொட்டா ஜில்லுன்னு இருக்கும். தலைல தான் இந்த மாதிரி ஜலத்தையும் சந்திரனையும் வைச்சுண்டு இருக்கறதாகன்னு கேட்டா கைலயும் காலிலையும் எப்ப பார்த்தாலும் மேலே எல்லாம் பாம்பை தூக்கி தூக்கி போட்டுண்டு பாம்பு சுத்திண்டு அது ஜிலு ஜிலு ஜிலுன்னுண்டு அது பாட்டுக்கும்

**"ஶீதலாங்கா: புஜங்கா:"**இது போறாதுன்னு ஒரு பனிக்கட்டி மலையில வெளஞ்ச ஒரு பொண்ணை பக்கத்தில, எப்ப பார்த்தாலும் பாதி ஒடம்பில ஒரு பனிக்கட்டி குழந்தை. ஒரு பொண் குழந்தை. அதுவும் நின்னுடும் இந்த பக்கத்துல. இவ்வளவும் போறாதுன்னு மார்கழி மாசம் வர போறது. மார்கழி மாசத்துல வெடிகாலம்பற எல்லாரும் ஜில்லுனு தன்னியை உன் தலைல எப்ப பார்த்தாலும் கொட்டிண்டு இருக்கப்போறா. அது போறாதுன்னுட்டு, ஊர் முழுக்க, வெறும் தண்ணி கொட்டினாலும் போறாதா? சந்தனத்தை நெறய அரைச்சு அது அப்பி மேலல்லாம், நாலு மணி மூணு மணிக்கு சிதம்பரத்ல கிதம்பரத்லலெல்லாம் ஆருத்ரா தரிசனம்னு பெயர் வேற வைச்சு நீ எப்படி தான் தாங்கறயோ, இவ்வளவு ஶீதத்த? வேற எவனாலயாவது தாங்க முடியுமா இவ்வளவு ஶீதத்த? மார்கழி மாசத்தில கணப்பு போடுவா. சித்திரை மாசத்துல சந்தனமோ கிந்தனமோ போட்டாலும் கொஞ்சம் தாங்கலாம். உனக்கு வேணும்னுட்டு மார்கழி மாசத்துல கொண்டுந்து போடறா, சந்தனத்தையும் தீர்த்தத்தையும் வெடிகாலம்பற எழுந்து அதுவும் குளுருல எழுந்து உன் தலையில பச்ச தண்ணி எல்லாம் கொட்டி அது போறாதுன்னுட்டு சந்தனங்களெல்லாம் நெறய ஒரே சந்தன அபிஷேகமாக பண்ணி அதுவும் அப்படியே சந்தன அபிஷேகம் பண்ணி எல்லாரும் தரிசனம் பண்ணனும்னு மணி கணக்கா நிறுத்தி வைச்சு, பழைய நாள்ல பெரிய சில காட்டு ராஜாக்கள்னு சில ஜமீந்தார்கள் சில ஜமீன்ல சில பெரிய மிராசுதார்கள்ல இப்படி வழக்கம். அப்போ இந்த ஈஸ்ட்

இண்டியா கம்பெனி அந்த காலத்துல தாசில்தார் கீசீல்தார் கலெக்டர் கிலக்ட்ர் வந்தாள்னா அந்த கலெக்டர் ஏதாவது நிரோதம் பண்ணிட்டான்னா அப்ப இந்த கார்த்திகை மார்கழி மாசத்துல வந்தான்னா அந்த சமையத்துல நிறைய சந்தனம் பூசி பத்து பேர் விசிற சொல்லிடறது அவனை, அவன் இது போறும்போறும்னு இந்த உபசாரத்தை. அந்த மாதிரி ஸ்வாமிக்கு அதுவும் இந்த மாதிரி மாசத்துல, இதை எப்படித்தான் இவ்வளவு ஶீதத்தை நீ தாங்கறயோ? பக்கத்துல இருக்கறவ ஒருத்தி இருக்காளே, அவ பொறந்த இடம் பனி ஊர்னு மாத்திரம் இல்லை, அவ என்னவா இருக்கா, எங்க பார்த்தாலும் அவளுக்கு தயை அப்படியே ஹ்ருதயத்திலே ஒழுகிண்டே இருக்கு, எல்லாம் குழந்தையோல்யோ அவளுக்கு. யாரை பார்த்தாலும் குழந்தையாச்சே, உலகத்துக்கு எல்லாம் தாய் அவ. அவளை வைச்சுண்டுருக்க. அவ எந்த குழந்தையைப் பார்த்தாலும் அவள் மனசு உருகறது. அது பாட்டுக்கு உருகிண்டே இருக்கு. அவளுடைய மனசு அவ பொண்ணு பொறந்த இடம் பனிக்கட்டி மலை. அதுவே ஒரு ஶீதலமா இருக்கும். இது வேற எங்கே பார்த்தாலும் அவளுக்கு எந்த கொழந்தையை பார்த்தாலும் மனசு உருகறது, எல்லாருக்கும் தாய் அவ. அப்பேர்ப்பட்டவளை வைச்சிண்டு **சந்தனம் ஸர்வகாத்ரே**, **காத்ரம்** னா, உடல்னு அர்த்தம். **ஸர்வகாத்ரே** னா உடம்பு முழுக்கனு அர்த்தம். இப்ப ஸ்லோகம் சொல்றது புரியும் கொஞ்சம்.**மௌலௌ கங்கா ஶஶாங்கௌ**, **ஶஶாங்கம்**னா முயல் அடையாளத்தை வைச்சிண்டிருக்கும்படியான சந்திரன்னு அர்த்தம். சில பேர் மான்னு சொல்வா அதை, சில பேர் முயல்னு சொல்வா அதை. மானாட்டமும் இருக்கும். முயலாட்டமும் இருக்கும். அது தூக்கிண்டிருக்கிற போது மான்னா கொம்புனு வைச்சுக்க வேண்டியது. முயல்னா காதுனு வைச்சுக்க வேண்டியது. இப்ப சமீப காலத்துல எல்லாரும் போய் பார்த்துட்டு வர போறா.

**மௌலௌ க3ங்கா3 ஶஶாங்கௌ கர சரண தலே ஶீதலாங்கா3: பு4ஜங்கா3:**

புஜங்காம்னா பாம்பு. ஶீதலாங்கா: னா, பாம்பின் உடைய அங்கம் முழுக்க ஶீதலமா இருக்கும்னு அர்த்தம். “ வாமே பாகே தயார்த்ரா”

தயைனால நிறைஞ்சு இருக்கு, எப்ப பார்த்தாலும் நிறைஞ்சி இருக்கா அவ. ஹிமகிரி து3ஹிதா, ஹிமம்னா பனி. கிரினா மலை. துஹிதானா **daughter** துஹித்ருங்கறது **daughter** னு வந்து இருக்கு. இந்த daughterனு சொல்றோமே ஒழிய அதிலேயே **h, h** எல்லாம் இருக்கு. இந்த துஹித்ரா, துஹிதானு சொல்ற **h** எல்லாம் இருக்கு அதிலே, அப்புறம் silentஆ போச்சு அது. ரொம்ப நாளா பழகி பழகி silentஆ போச்சு அதெல்லாம். **g, h** எல்லாம் இருக்கு, அதிலே துஹித்ருனு சப்தம் அதான் **daughter**னுட்டு அவா வைச்சுண்டிருக்கா அதை. **வாமே பாகே தயார்த்ரா** , ஆர்த்ரானா நனைஞ்சதுனு அர்த்தம். இந்த ஆர்த்ரா தரிசனம்னு சொல்றோமே, அது கூட உலகம் முழுக்க என்னிக்கு நனைஞ்சு இருக்குமோ அன்னிக்கு தான் ஆர்த்ரா தரிசனம். நிலா வேற, அதுவேற ஜில்லுனு இருக்கும். அந்த ஆர்த்ரா தரிசனத்துக்கு தான் இருக்கறதுக்குள்ள பனி ஜாஸ்தி. மார்கழி மாசம் நிலா, பனி எல்லாம் சேர்ந்தன்னிக்கு ஆர்த்ரை. அன்னிக்கு **தான்** ஸ்வாமிக்கும் சந்தன அபிஷேகம். உலகம் முழுக்க நனைஞ்சு இருக்கற நாள். அது தான் ஆர்த்ரா தரிசனம். ஆர்த்ரம்னா நனைஞ்சதுனு அர்த்தம் ஸம்ஸ்க்ருதத்திலேயே அதுக்கு. ஆர்த்ரம்னா நனைஞ்சதுனு அர்த்தம். ஓடு,கீடு, மரம், கிரம் மழை பெய்யாத **போது** கூட மரத்தடில போய் அன்னிக்கு **காலமே**, வெடிகாலம்பற நின்னோம்னா கொஞ்சம் ஆட்டினா தலை முழுக்க மழை பெய்யும். மழை பெய்யும். ஓடெல்லாம் தண்ணி ஒழுகிண்டே இருக்கும். அதுக்குத்தான் ஆர்த்ரானு பேர். ஆர்த்ரா நக்ஷத்திரம் தான் சிவனுக்கு . இடத்திலேயும்.திருவாதிரை திருவாதிரைனு சிவனுக்கு. அதனாலே இந்தத் திருவாதிரைல ஆர்த்ரானா நனைஞ்சதுனு அர்த்தம்.

அதான் அந்த ஸ்வாமியை பார்த்து உமக்கு எப்படி சக்தி வந்ததுனா என்னுடைய தவிச்சுண்டு இருக்கற ஹ்ருதயத்தில

நீர் இருக்கீரே அதுனாலே சக்தி வந்தது.   கொஞ்சம் நனைச்சாவது வெப்போம். நனச்ச ஸ்வாமியா, நனைஞ்சிண்டாவது வருவீறோல்யோ அப்புறம். அப்பவாவது கொஞ்சம் இது அந்த நனஞ்சத்துனால  ஏதாவது கொஞ்சம் இந்த உஷ்ணம் கொஞ்சம் குறையட்டும் அப்படினு பெரியவாள் எல்லாம் பிரார்த்திச்சத நானும் ஞாபகப் படுத்தி உங்க காதுலையும் போட்டு வைச்சேன் எல்லார்  எடத்துலயும்.

நம: பார்வதீ பதயே ஹரஹர மஹாதேவ

கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்த கோவிந்த